
# உறக்கந்தேடும் உலகிற்காய்

529



JPL
C529

சார்ள்ஸ்

ர்ள்

மாணவ

# உறக்கந்தேடும் உலகிற்காய்

KOHA
JPL

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

சார்ள்ஸ்

PUBLIC LIBRARY
JAFFNA.

இது ஒரு
'மாணவர் கலை இலக்கிய மன்ற' வெளியீடு

மாணவர் பதிப்பு: 25/-
விசேட பதிப்பு: 30/-
நூலகப் பதிப்பு: 35/-

529 ZEY
80363 Cey.c.

# கருத்துரை

1

பண்டிதருக்கும், படித்தவருக்கும் மட்டுமே கைவசமாகி இருந்த கவிதைக்கலை, பாரதிக்குப் பின் பாமரர்க்குப் என்றாகி இன்று இளைஞர்களுக்கும் இலகுவாகிப் போனது. இது எதனால் நிகழ்வுற்றது?

கலை வரலாற்றின் நியதியா?
சமூக வரலாற்று நியதியா?
கவி மரபின் நெகிழ்வுறு தன்மையா?
கவிப் பொருளின் 'கனவிச்சு' வெம்மையா?
கவிகளின் சத்திய தார்மீக-சமூகக்கோபங்களா?
அன்றி, எல்லாமே இணைந்தால் ஏற்பட்ட -
-புதுவடிவ உயிர்ப்பு நெறியா?

சார்ள்ஸின் இக்கவிதைத் தொகுதியினை முழுமையாகப் படித்து முடித்தும் இத்தகைய சிந்தனைகள் மனதில் மின்னலெனக் கிளைவிட்டுப் படர்வது இயல்பானதாகி விடுகின்றது

இக் கவிதைகளை படித்து நீண்ட நேரம் சென்ற பின்பும் அவை எழுப்பிச் சென்ற மன அதிர்வுகள் நிதானம் கொள்வதில்லை கவிதைகளே என்றாரம்பித்து கவிக்கோலங்கள் ஆங்காங்கே இலக்கணங்களை மீறிப் புதிய பிறப்பெடுத்த போதும் கவிதைகளெனவே இவர்வரிகள் நெஞ்சில் உறைகின்றன அதனாற்றான் இவற்றைப் புதுக்கவிதைகள் என்றேமோ.

சேர்வு எண் 60363
வகுப்பெண் 894.8...

KOHA
JPL
தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.



வேர்ஸ்லிப்ரே (Verse Libre) எனப் பிரெஞ்சு மொழியிலும் ஃபிரீவேர்ஸ், பிளாங்வேர்ஸ் (Free Verse, Blank Verse) என ஆங்கிலத்திலும் வழங்கப்படும் புதுக்கவிதைக்கு முதலில் வசனகவிதை எனப்பெயர் சூட்டியவர் அமரகவி சி. சுப்பிரமணிய பாரதியார். மரபுவழி செய்யுட்களில் குயிற்பாட்டு, பாஞ்சாலிசபதம், ஞானரதம், எனத் தமிழன்னைக்கு அணிகள் பல பூட்டிய அவர் காட்சி, சக்தி கூற்று, ஜகத்சித்திரம் பாம்பும், பிடாரனும், சிட்டுக்குருவி சூரியோதயம் என வசன கவிதைகளை யாத்திருக்கின்றார். மரபுவழிக் கவிதைகளின் இலக்கண வேலிகளை பொதுமக்களுக்காக தகர்த்தெறிந்த பாரதிக்கு வசனகவிதை எழுத வேண்டிய தேவை என்ன என்பதனை விமர்சகர்கள் சற்று சிந்திக்கவேண்டும்.

மேனாட்டவரான புதுக்கவிதையாளரான அமிலோவ் என்பார் 'வேர்ஸ் லிப்ரே என்பது பேசும் குரலின் ஒலி நயத்தினடிப்படையில் இயங்குவதேயன்றி திட்டமிடப்பட்ட சந்த அமைப்பைக் கடைப்பிடித்து உருவாவதில்லை' என்ற கருத்தையும் இன்றைய நவீன கவிதை நாடகங்களையும் இணைத்துப் பார்ப்பது பலமரபு விடயங்களைப் பற்றிய ஐயங்களைத் தெளிவாக்கும்

ரி. எஸ் எலியட் 'கவிதை மரபில் வழக்கொழிந்து போன உருவவகைக்கு எதிரான கலகமே புதுக்கவிதையின்தோற்றம் என்பதனையும் பார்வையிலேயே ஒன்றைக் கவிதையா வேறேதும் துணுக்கா என்று முடிவு கட்டிவிடும். இன்றைய நிலைமையும் இணைத்துப் பார்ப்பதும் கவிமரபு மீறல்களின் போக்கை புரிந்து கொள்ள உதவும்.

எஸ்ரா பவுண்ட் தீர்மானிக்கப்பட்ட சந்த முறைகளை விட, அதிக அழகுடன் ஒரு ஒலி நடத்தையை உள்ளடக்கத்தில் ஏற்றுக் காட்ட முடிகின்றபோதும் அதிக இயல்பானதாகம் உணர்ச்சி வெளியீடு அதிகமானதாகவும், பொருத்தமானதாகவும், அர்த்தம் ஆழமானதாகவும் விரவிவரும் வேளைகளில் புதுக்கவிதை தோன்றும் என்றார்.

''கவிதையை ஆக்குவது துலக்கமாகவுள்ள உருவமில்லை' உட்பொதிந்திருக்கும் உணர்ச்சிப்பாங்குதான்'' என்றலோறன்சின் கருத்துக்களையும் கொண்டு நோக்குமிடத்து புதுக்கவிதை என்பது யாப்பினையோ, மரபினையோ மீறுவதோ அறியாதிருப்பதோ அல்ல அவற்றிற்கு புதுவடிவமும் திருத்தமும் கொடுத்து சப்தரூபங்களாக தமக்கெனச் சில உருவங்களைக் கொண்டு வெளிவரும் நாதவலைகள் எனலாம்.

## 3

தமிழில் பாரதியைத் தொடர்ந்து புதுமைப்பித்தன் சிதம்பரரகுநாதன், கு.ப. ராஜகோபாலன், ந. பிச்சமூர்த்தி வல்லிக்கண்ணன், போன்றோர் தமிழகத்திலும் எஸ் இராமநாதன், நாவற்குழியூர் நடராசன், வரதர், முல்லைச்சிவன் போன்றோர் ஈழத்திலும் புதுக்கவிதை மரபை வளர்த்தனர். இவர்கள் அனைவரும் இலக்கணவிதிகளையும் மரபுகளையும் நன்கு கற்றுணர்ந்தவர்கள் என்பதும் தெரிந்ததே இந்தப் புதுக்கவிதர் இயக்கத்தினை வளர்ப்பதில் ஆர்வம் காட்டினர் என்பது கவனிக்கத்தக்கது. அதிகம் ஏன்? புதுக்கவிதை பற்றிச் சிறிதும் கனவிலும் கருதாத பண்டிதமணியின் உரைநடை நூல்களில் அவர் கையாண்டிருப்பது புதுக்கவிதையின் உரைவீச்சு நெறி என்பது பற்றி ஆய்வு நடத்துவது பயனுடையதாக அமையும். ஏன் தற்காலச்சிறந்த புதுக்கவிதையாளரான சி மணி, செல்வம் என்ற பெயரில் அப்போதே நடை ஏட்டில் யாப்பியல் என்ற தலைப்பில் ஒரு தனி நூலையே அனுபந்தமாக விட்டமையும் குறிப்பிடத் தக்கது.

1959ல் தமிழகத்தில் சி. க. செல்லப்பா ஆரம்பித்த 'எழுத்து' ஏடு முன்னே கூறியவர்களுடன் சி மணி தி சோ வேணுகோபாலன், சி. வைத்தீஸ்வரன், ஞானக்கூத்தன் சுந்தரராமசாமி நகுலன், ஷண்முகசுப்பையா, நீலபத்மனுபன் தருமு சிவராமு. பெனடிக்ற் பாலன் போன்றோரை புதுக் கவிதையாளராக இனம் காட்டிற்று

KOHA
JPL

கணையாழி, நடை, கசடதபற, ஞானரதம், சதங்கை, கண்ணதாசன், யாத்ரா, பிரக்ஞை, கொல்லிப்பாவை, ழ படிமம், போன்ற பத்திரிகைகள் முன்னர் எழுதிய கவிஞர்களுடன் வே. மாலி (சி மணி), பரந்தாமன், கலாப்பிரியா நீலமணி காசிபன் போன்றோரின் படைப்புக்களையும் வெளியிட்டன இன்குலாப், கார்க்கி, இளவேனில் கம்யூனிசக் கருத்துக்களால் புதுக்கவிதையாற்றினர்.

ஈழத்தில் திக்குவலை கமால் (எலிக்கூடு) ஈழவாணன் (அக்கினிப் பூக்கள்) மேமன் கவி அன்பு - ஜவஹர்ஷா இக்பால் பஸீல் காரியப்பர், போன்றோர் எழுதி வந்தனர்.

உள்ளோட்ட மனவுணர்வுகளையும், பாலுணர்வினையும் முக்கியமாகக் கருதி, தனிமனித மனக்குகை ஓவியங்களாக புதுக்கவிதைகள் புற்றீசலெனப் புறப்பட்டபோது, கோவை மாவட்டத்திலிருந்து நா. காமராசன், மீரா, சிற்பி பால சுப்பிரமணியம், புவியரசு, அக்னிபுத்திரன், கங்கை கொண்டான், மு. மேத்தா, தமிழன்பன், அப்துல் ரகுமான் சி. ஆர். ரவீந்திரன், ஆகியோர் ஒன்று சேர்ந்து வானம்பாடி என்றொரு விலையிலாக் கவிமடலை வெளியிட்டனர். இவர்கள் புதுக்கவிதை வடிவத்தில் சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களையும், புரக்கோஷங்களையும், சமதர்ம வாழ்க்கை பொருளாதார எதிர்பார்ப்புக்களையும் கொண்ட சத்ய ஆவேசங்களையும் தார்மீகப் போராட்டங்களையும் புதுக்கவிதைப் பொருளாக்கின:

யுகத்தின் மீது
சுவடுகள் பதிக்கிற
புனித வரிகளே
இனிநமக்குத் தேவை

பா. செயப்பிரகாசம்

இந்தப் புதிய போக்கு ஈழத்தில் புதுக்கவிதைக்குப் புதிய பாதையை அமைத்து குமரன், மல்லிகை போன்ற பத்திரிகைகள் இதற்குதவின. புதுவை இரத்தினதுரை உ. சேரன், வ. ஐ. ச. ஜெயபாலன், தமிழ்ச்செல்வன் சாருமதி எம். ஏ. நுஃமான், சபா ஜெயராசா, மேகம் கணபதி அ. யேசுராசா, மு. புஸ்பராஜன், சோலைக்கிளி, சண்முகம் சிவலிங்கம் புதிசு ஆசிரியர் குழுவினர் போன்றோர் அரசியல் பொருளாதார சமூக நடப்புகளை மிகவும் விமர்சன ரீதியாக புதுக்கவிமரபினை விரிவடையச் செய்ததோடு இலக்கிய வீச்சில் புதுக்கவிதையின் எல்லையையும் கடந்து புதியதொரு இலக்கியப் பரிணாமமாக கொண்டு வந்தனர் இவர்களின் இம்முயற்சி தற்செயலானதோ இலக்கியம் தொடர்பானதோ அல்ல சமூக மரபு மாற்றங்களினால் ஏற்பட்ட புதுக் கோலம் ஆயின. முன்னர் வியட்னாம் போரையும் தென்னாபிரிக்க நாடுகளின் விடுதலைப் போராட்டங்களையும் எட்ட நின்று பாடியவர்களுக்கு தம் நாட்டிலேயே இததகைய போராட்டங்களுக்கான தேவைகள் இருப்பதை உணர்ந்த போது வீறுகொண்ட நெறியுடன் புதுக்கவிதையின் போக்கையே புடம் போட்டு ஜொலிக்கச் செய்தனர் பலகவிதைகள் யுத்தகள மேட்டிலிருந்தே செந்நிறப் புறுக்களாக பறந்து வந்து மக்களை வியப்பிலாத்தின உண்மைக்கும் அது தொடர்பான உணர்ச்சிக்கும் உகந்த உந்நத வெளிப்பாடாக இக் கவிதைகள் எழுந்தன.

கண்ணீர் அஞ்சலிகளும் மரண ஓலங்களும் கூட புதுக் கவிதைக்கே புதுப்புது அர்த்தம் கற்பித்தன தெருவோரச் சுவர்கள் நாடோறும் புதுக்கவிதைப் பிரகடனம் செய்தன புதிய உவமைகள், உருவகங்கள், படிமங்களைக் கொண்டு சரிந்து நின்ற தெருச்சுவர்கள் கூட தலைநிமிர்ந்து நின்றன

இந்தப் பின்னணியில் தான் இக்கவிதைத் தொகுதி வருகிறது இன்னமும் கல்லூரிப்படிப்பைசய முடிக்காத இந்த இளம்கவிஞரின் இப்படைப்பு நமது நிகழ்காலத்தையே சுட்டிக் கிடக்கிறது. கல்லூரி மாணவனைப் பாடவைப்பதும் அதனை நூலுருவில் அச்சேற்ற வைத்ததும் என்ன?

இன்று மாணவர்கள் எவரும் புத்தகப்பூச்சிகளல்ல. தாங்கள் வகுப்பறையில் கற்பதெல்லாம் நடப்பியலில் சரிதானா என்று உரைத்துப் பார்ப்பவர்கள் பிழை என்று காணும்போது களத்திலேயே இறங்கிவிடுவது கண்கூடு இவர்களின் கேள்விக்கு காலம் மட்டும் பதில் சொன்னால் போதாது கேள்விக்குரியவர்களின் உடனடிப் பதிலும் தேவை சரியான பதில் கிட்டாது போனால்?

அவற்றின் விளைவுகளே இக்கவிதைகள் என எண்ணுகிறேன். சத்யா வேசமும் நாட்டின் நிகழ்கால நடப்புகளுமே கவிதா வீச்சுக்களான சாட்டையடிகளாகின்றன. எனினும் இக்கவிதைகளின் நோக்கம் கவிதா சிருஷ்டியன்று எல்லாவற்றிற்கும் மேலாக தமிழினத்தின் விடிவுக்கான போர்ப் பரணியே ''கவிதை என் போர்வாள்' என்றான் கவிஞன் தே. சி. அருணாசலம் இங்கு சார்ள்ஸ் என்ற இக்கவிஞன் 'கவிதை என் இனத்தின் உயிர் மூச்சு' என்கிறார் வெறும் வார்த்தைகளால் விமர்சனங்களால் மட்டும் கவிதையையோ கவிதையோ தரிசித்துவிட முடியாது வாசகனின் அனுபவமும் கவிதா அனுபவ வீச்சும் கொள்ளும் சமநிலை பரிவர்த்தனையே இதனைச் சாதிக்கமுடியும் எனவே நீங்களும் படித்துப் பாருங்கள்.

யாழ்ப்பாணம்

—செம்பியன்செல்வன்



# அணையாத அறிவாலயம்

நிலா விழித்துக் கொண்டபின்
காரிருள் சூழ்ந்த
கணமதிலே காடையரும் கொலையரும்
கூத்தடிப்பர்
நிசப்தமாய் இரவு விழித்துக் கொள்ளும்
தீப்பந்தங்கள் பலவும்
இறுமாப்பெய்தும்
அனலைக் கக்கி கனலைச் சூடாக்கி
கடாகி விட்ட
சோலைப்புஸ்பத்தை
நீசர்களின் நெஞ்சுறுதிமிக்க செயலா?
இல்லையேல்
தர்மிஸ்டம் கூறி தார்மீகம் பேசும்
தந்திரவாதிகளுக்கு
தப்பட்டம் அடித்து முடிசூட்டிக் கொள்ள
உதவிடும் தர்பார்க் காடைத்தனமா
பின்னைய விடியலில்

எரிந்த மீதியும்
இடிந்த சுண்ணும்பும் - இன்னுமோர்
அனுதாபத்துக்கும் அபலத்துக்கும்
இட்டுச் செல்லும்
கொடிய வாளினை ஏந்திய
சிங்கக் கொடி கட்டி
சிம்மாசனத்தில் வீற்றிருக்கும்
சிரந்தாழ்த்தி வணங்க வைத்திடும்
தர்மிஸ்ட தார்மீக வாதிகள்
இவைதனை அறியாரோ
கொடிய காற்று வீசிக் கொள்ளும்

பண்ணைக் கடலோரம்
வெள்ளையிருல் மிதந்து கொள்ளும்
சுற்றிய கருங்கல் கோட்டை
நம்மவரை குறிவைத்துக் கொள்ளும்
இத்தனையிலும்
ஏதுமறியா அறிவைப் - பெருக்கிடும்
அன்னையகம் குற்றம் சுமந்ததோ
இல்லையேல்
குற்றத்தைச் சுமக்க வைத்தனரோ
யாருக்குத் தெரியும்
எரிந்த கனமதில் பெற்றோலுக்கும்
திப்பந்தங்களிடையான உறவுகள்
பதில் சொல்லும்
அனல் மீதினிலே
அவரவர் 'பூட்ஸ்' தனை பதித்தபின்
வெளியேறுவர்
நாளைய சந்ததி கொடுமையினை
நெஞ்சினில் நிறைத்துக் கொள்வர்
சுமைதனைக் கூட்டி
அறிவதனைப் பெருக்கிட
அஞ்சாது நின்ற அருங்கோயில்
காற்றோடு காற்றாகக்
கலந்து கொண்ட மனிதப் பிண்டமாய்

வெள்ளமதில் மிதந்திடும்
சருகுகளாய்;
அடுப்பதனில் புகைக்கும்
கரிக்கட்டையாய்
உந்தன் கற்பு தனையே
கரைத்து விட்டனரே

காலமதில் கண் வைத்து
நாளைய யுகமதில் நெஞ்சங் கொண்டு
பின்னைய இரவுகளிவ்
உயிரைம் பிடித்துக் கொண்டு
அரைப் பிணமாய்
அவலங் கொண்டதிலும்
அணையாத அஞ்சுகத்தின்
அறிவாலயம் தீயோடு மரித்ததைப்
பொறுக்கலாமா!
ஆழமான நினைவுகளையும்
போக்க முடியவில்லையே

நேற்றைய பொழுதினில்
கையசைத்து விடை கொடுத்த
நண்பனவனை மீளப்பார்க்கையிலும்
முன்னைய நாட் பொழுதினில்
நாளைய காலை திறந்திடும்
உந்தன் வாசற்கதவு - என நினைக்க
பண்ணைக் கடலோரம்
வெள்ளமாய்ப் பெருக்கெடுத்தது
கோட்டையைச் சரித்தது
என பகற் கனவு கண்டிட
அறிவகத்தின் இழப்புத்தான்
மேலோங்கியதாயிற்று
நேற்றய பொழுதினில் கையசைத்து
விடைபெற்றது
ஓர் அறிவாலயம்... ..

இரவுச் சுமைகளால்
நிறைந்திடும் கப்பப்பபையும்
காலையில் கூவிடினும்
காலம் காலமாயிருந்த பொக்கிசம்
காற்ரோடு காற்ருகக்
கலந்தனே எத்தனே சந்ததியின்
கலங்கள் நெஞ்சினில்
நீளப் பதித்துக் கொள்ளும்
இதனுல்
நாளைய சந்ததியும் புதிய விடியலுக்காய்
அறைகூவும்
அணையாத அறிவகத்தின்
இழப்பின் மேலாக!

தரங்கெட்டோர் தவழ்ந்தழுததி
தந்திரமாய்
தரணியினை தமக்குரியதாய்
ஆட்சி பண்ணுகையில்
நம்மினம் எமனேயஞ்சாவிடினும்
நாக்கிழந்த நரகர் கூட்டமாய்
பொய்மையிற் பூத்த
எத்தனேக்கெல்லாம்
அஞ்சவேண்டியதாயிற்று
உயிருக்கும்;
உடமைக்கும்; ஊனுக்கும்;
உறவுக்கும்; உற்ற தோழமைக்கும்
கருத்துக்கும், சொல்லுக்கும், செயலுக்குமாய்
அடிமைப்பட்டோம் - அடக்கப்பட்டோம்
ஆயுள் முடிவினிலே அமரராகும்
மேனியினே
கூற்றவன் கூறுபோட்டினும்
கொடியவன் துண்டாக்கினுலும்
நாளைய சந்ததி
அறிவைப் பெற்றெடுக்கும்

நம் மேனியிலிருந்து
இதனையிட்டோ - அழித்தொழித்தனர்
அறிவகமதனை
புதிய எழுச்சி இல்லாமற் போகுமென
கங்கணமும் கட்டினர்
கூற்றவனும் கொடியவனும்
இனவாதிகளிலும் மேலானவர்களே

அறிவகத்தை எரித்தபின்
'அநியாயம்; அக்கிரமம்
எரித்தோர் மீது விசாரனை
பிடிவிருந்து; 'கைது' வாரன்ட்
எனவெல்லாம்
அரசே தன்பக்கம் 'நீதி' எனக்கொள்ளும்
உண்மைகள்
வெட்ட வெளிக்கும் - வெளிச்சம்
எரித்த சாம்பலை அள்ளிக் குவிப்பதும்
வெள்ளை பூசி மெருகூட்டி
மந்திரிகளும்; மாண்பு மிகுக்களும்
மாலைகளைச் சுமந்து கொள்வர்
தேரோடும் வீதிகளிலே
இனவாதக் கார்கள் ஊரும்
அலறிக் கொள்ளும் அரசு
மீளப் புணருத்தாரணம் வெகுவிரைவில்
எரித்தோர் மீது விசாரனை

இழப்பின் முடிவினில்
ஏதுமறியா சுண்ணாம்புக் குன்றுகள்
மானிடத்தை பரிகாசிக்கும்
மறந்து போன
மனிதாபிமானம மரணத்திற் கூட
வராவிடினும்
ஆயிரமாயிரம் சந்ததிகளின்
அறிவுப் பசிக்கு இரையூட்டும்
அறிவாலய இழப்பினிற் கூட

மனிதாபிமானமின்றி
தர்மிஸ்டமும், தார்மீகமும் - அரசு
கூறிக் கொள்வதையிட்டு
எரிந்த சாம்பற் குவியலும்
இடிந்த சுண்கற் குவியலும்
மானிடத்தைப் பரிகாசிக்கும்
பரிதாபமாய்
காற்றினிலே வந்ததோ
வசந்தகீதம்
நாற்றினிலே விளைந்ததோ
நெற்குவியல்
நாட்டினிலே மிதந்ததோ
இனவாதம்
சேற்றினிலே ஊர்ந்ததோ
காடைத்தனம்
அறிவகத்தை எரித்ததோ
அரசு - அதனூடு எழுகின்றது
புதிய எழுச்சியொன்று

விடியலுக்குப் பூபாளமிடும்
போர்க்கால முகாரிகளும்
தோழமையின் இழப்பினில் - தோல்வியை
நினையாத எழுச்சிக்கு ஆயிரமாயிரம்
அணிதிரல்தலின் பாசறைக் கீதங்களும்
புதிய விடியலுக்கு அறைகூவட்டும்
நாளைய வரலாற்றில்
சந்ததி மறவாச் சரித்திரமாகட்டும்
அணையாத அறிவாலய மொன்றின்
அழிப்பு!

ஆயிரமாயிரம் இழப்புகளினூடும்
புதிய வரலாற்றை நிலைநாட்டினும்
பலநூறு சந்ததியின்
அறிவக இழப்பினை - அதனை
ஈடாக்கலாம் ..
ஒரு பண்பாட்டு கொலையாக
பாசிசத்தின் பயங்கரமதை
அறிவாலயம் சுமந்து கொண்டதோ
அணையாத அறிவாலயத்தின்
இழப்பினை
ஆயிரமாயிரம் சந்ததிகளுக்குச்
சந்ததி மறவாச் சரித்திரமாகட்டும்



# ஓர் பண்பாட்டுப் படுகொலை நினைவாக!

வானம் பொய்த்துக் கொண்டு
அழவில்லை - நல்ல சூடான தெப்பக்காற்று
கடலோர காற்றசைவில்
புற்களையும் புல்லினங்களையும் வருடிக் கொண்டது

மாருப்பெய்திய கன மண்டைச் சட்டிகளோ
நீரூத சுண்ணாம்புக் கற்கோயிலாக
கோலமிட்ட வாசற்படியதில் காலடியிட்டு
பந்தங்கள் பல பற்ற வைத்தனரோ

உறுமும் பண்ணைக் கடலோர அலைகளும்
இருல் கவ்வ கும்மிருக்கும் கூடை வலைகளும்
காற்றினிலே அசைந்திடும் முனியப்பர் கோபுரமணியும்
தெருவதனில் நடப்பதை யாரறிவர்

விளக்ககன்ற வீதிகளில் தீச்சுவாலைகள்
கையதனில் இருப்புக் குழாய்களும்
விதிகளை அரசு அறிவிக்க
விடைகளைக் காட்டினர் அக்கினிக்காய்

ஊரும் உலகும் ஒப்பாரி கொள்ளும்
நேற்றிருந்தோர் இன்றில்லையென
நாளைய மக்கட் பிறவிகள் அழிந்தனரே
நரகர் அவர் கைங்கரியத்தால்

வேற்றுமைகளை மறந்து சொள்வோம்
நாட்டினிலே அமைதி காண்போம்
போற்றியே புகழ்ந்திடும் மந்திரிகளும்
எரிவதனைப் பார்த்திருந்தனரோ

நாளைய விடியலில்த் துளங்கும்
நவநாகரீகத்தின் அடிச்சுவடுகள்
நேற்றய இரவின் கோரம்
இன்னும் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கும்

காற்றினிலே கரைந்து கொண்டதும்
சேற்றினிலே கரைந்து கொள்வதுமாய்
வானமதில் புகைகொண்டு
விண்ணையும் அடைந்ததோ அறிவாய்

மாற்றுந்தாய் மனப்பாங்கும்
விருப்புக் கொடுங்கோலாட்சியும்
நாட்டுக்காய் அரசாள்கையில்.
யாரிடம் யார் சொல்வதில் பயனென்ன

இழப்பவை ஆயிரமாயிரம் பொன்னுயினும்
அழிபவை பலகோடி உடமையாயினும்
இழந்திட்டதோ பல்லாண்டுச்
சந்ததியின் பண்பாட்டுச் சின்னமல்லவா

வேலிக்கு விலங்கிட்டுப்
நீயுங்கூட குற்றவாளி எனும் - அரசு
அரசுக்கெதிரானவரை பாதுகாத்தாயென
பிதற்றிக் கொள்வர் பொய்மையிற் பூத்தோர்

இலக்கற்ற இனவாதங் கொண்டு
இறுமாப்பின் இழுக்கப்பண்ணிடும் உயிர்களும்
கொடுங்கால அரசாட்சியில் கொலையொரு
ராஜகர்மமாகும் - போதிமரத்தவர்களுக்கு

சிம்பிடித்த சிறிக் கொள்ளும் வாளேந்திய
சிங்கக் கொடியாளர்கள்
சிம்மாசனமதில் ஏறிய பின் - மக்கட்
சிரங்களையே அறுத்தனரே அரசாள்வோர்

மாண்டு போயிற்று மக்கட் கோயில்
மனிதாபிமானங் கூட மரித்துப் போயிற்று
காலங்காலயான பொக்கிசம் புதைந்ததோ
கானகமாய் மாறிக்கொண்டதோ சோலையொன்று

விலங்கிட்ட மாந்தர்களுக்குத்
தின்னக் கொடுக்கும் சித்திரவதை மேலாக
சில கணமதிலேயே சிதைந்து கொண்ட - அறிவு
சிகரமதின் இழப்பு பாரியதுவே

அக்கினியுடன் சங்கமித்தபின்
ஆயிரமாயிரம் பொய்மைகளைச் சொல்லி
அணையாத அறிவாலயத்தை நம்மவரே
அழித்தனரென பிதற்றிக் கொள்ளும் அரசு

புனர் நிர்மானமும் புத்தாக்கமுமாய் - அறிவகம்
புதைந்த பின் செய்வதில் யாது பயன்
யாரறிவார் யமனின் சாதுர்யத்தை
யாகங்கூடப் பண்ணிடும் இதற்காகவே அரசு

நாளைய விடியலில் மலரும்
புதிய சந்ததிகளும்; ஆயிரமாயிரம்
சிந்தை மறவாச் சரித்திரமாகட்டும்
ஒரு பண்பாட்டு படுகொலை நினைவுகளோடு



# ஹிட்லரை மீறி முன்னேறும்……

எதிர்க்கெதிராய் குண்டு பொழிந்திடினும்
போர்க்கால மேகங்களில்
புகைகளைக் கவ்வி
பிணங்களைத் தின்ன
ஏவிடும் குண்டுகளைப்
பொழிந்திடும் ராட்சத வானூர்திகள்
மனிதாபிமானத்தை மறுத்தாலும்
மரணத்தை அளித்தாலும்
சந்ததி சந்ததியாய் வளரும்
அறிவகத்தை அழித்தனர் இல்லை
இல்லையே

விண்ணைக் கூவிடும்
வியாபித்த ஒலி செவிதனைப் பறித்திடினும்
பொம்பர்கள் கூட
'இலண்டன்' அறிவகத்தை
'வின்சன் சேர்ச்சி' லுக்காக மட்டுமே

நாளைய சந்ததிக்காகவும்
விட்டு வைத்தன
ஆயினும்; ஆயினும்
ஹிட்லரின் அடிச்சுவட்டில்
தொடரும் இனவாதம்
ஹிட்லரை மீறுகின்றதோ!

பொல்பொட்டையும் முசோலினியையும்
கூடவே வென்று
இனவாதம் புரியும்
தார்மீக தர்மிஸ்டர்கள்
அறிவகத்தை அழிப்பதில்
ஏன்தானும்
மரபுகளை மீறுகின்றனரோ...
ஹிட்லரை விட தம்பெயர்
வரலாற்றில் மேலோங்கவா

விலங்கொடித்தெழும்
புதிய மானிடம்
கொடூர நிகழ்வுக்காய்
போர்க்கொடி ஏந்தும்
ஹிட்லர்; முசோலினி; பொல்பொட்
வரலாற்றில் மறந்திடினும்
இனவாத தர்மிஸ்டர்களை
ஒருபோதும் மறக்கவியலாது

இன்னமும் இவர்கள்
போதிமரத்தில் 'பிரித்' ஓதுதல்
வேண்டுமா?
நல்ல நூல்களை எரித்து
குளிர் காயலாமே!
தார்மீக தர்மிஸ்டங்களின் முன்னேறல்
ஹிட்லரையும் மீறியபடி .



# தீராத தாகமாய்

என் தாய் நாடே!
யாரிடம் சொல்லித் துயர்கொள்வேன்
தாயின் இறப்பினில்
கொள்ளியைத்தான் சுமந்தாலும்
தாய் நாட்டினில் மீதுமல்லவா
சுமக்கலாயிற்று
கருத்த இரவுகளில்
ஊளையிடும் நாய்களும்; நரிகளும்
மறைந்து விட்டனவோ? - மனிதர்களை
காணாத மண்ணில் - நாய்கள்
எங்ஙனம் நன்றிக்காகவா

ஊரைக் கொழுத்தி
உலகை மாய்த்திட நினைக்கும்
கைங்கரியத்துக்காய்
காவல் புரியும் கோட்டையருகே
கொள்ளிகளைச் சுமந்தே
அறிவதனை தொப்பையாக்கினரோ
மீதமும் மிச்சமாய்
காகங் குருவிகளுக்குக் கூட

ஏதுமில்லமையாய்...
இடிந்த கண் துகள்கள்
எரிந்த மட்டை கட்டிய நூல்களும்
நம்மோடு அங்கலாய்க்கின்றன

நம்மூர்
அறிவாலய மறைவினிலே
அழிப்பினிலே
காலியிலும்; கம்பளையிலும்
நூலகங்கள் திறப்பு என
அலறும் வானொலியும்
உளறும் அரசும்
இனிய அறிவாலய அழிப்பினை
அறிய மாட்டாதோ!

நாம் சுமந்து கொள்வது
தாய் நாட்டையே
கொள்ளி கொண்டதோ!
யாரறிவோம்
இன்னமும் தீராத பசிகளுடன்
பலநூறு கொள்ளிகள்
அனலைக் கக்கி
கனலாய்க் காத்துள்ளன.



# எழுந்து வரும் சந்ததியும்

தூர்ந்து போன வசந்தமும்
நாளைய சந்ததியின் வளமும்
இழந்துபோன துயரங்களில்
பங்கெடுத்துக் கொள்ளும்
மானிடர்களில் நாமுமொருவராய்
தாயகம் ஒன்றின் வரலாறு
தேடியழித்த தீங்கினை
இன்னும் பல நாட்களும்
நெஞ்சினிற் கொள்ளும் வரை
போராடிக் கொண்டிருப்போம்
புதிய எழுச்சியை நோக்கியோ

திடமான கொள்கைகளில்
ஆயிரமாயிரம் கரங்கள்
ஒன்றிணைந்து அணிவகுக்கும்
இழப்பின் சுவடுகளை
இல்லாமற் பண்ணும் இனவாதம்
இயற்கையின் வெற்றிடத்தை

அழித்துக் கொள்ளுமா - ஓர்
அறிவாலயத்தின் இழப்பினூடாகவே

நாட்களை எண்ணிச் சிறையினில்
சிதைந்த போதிலும்
வாழ்வை மறந்து மரணத்தை
தேரிடினும்

நம்மினிய தேசத்தின்
வரலாற்றும் படுகொலையினை
நினைக்கையில் - குமுறும் அலைகடலாய்
நம்மவர் நெஞ்சங்கள்

இன்னுமோர் சந்ததி
எழுந்து வரும்
கொடிய நீசர்களின்
எரிப்புக் கரங்களை அழித்தொழிக்கவும்
புதிய வரலாற்றுக்கு
எழுச்சி யூட்டவுமாய்



# துயர்வுகளினூடு.........

விலங்கை விட்டெழும் மனிதர்களாய்
அக்கினி சாட்சியினில்
கருவைப் பெற்றெடுக்கும்
அன்னையாய்,
சுமைகளைச் சோராது சுமந்து
நாளைய வாழ்வுக்காய்
ஜீவித்துக் கொண்டிருந்தாய்
உன்னுடைய இழப்பினிலும்
புதிய வரலாற்றைக் காண்கிறோம்
இன்னுமோர் சகாப்தம்
எழுந்து கொள்வதையும் கூட

நாகரீகச் சின்னங்களுக்காய்
நாகவிகாரையை அலங்கரிப்பர்
நம் நாளைய வாழ்வின்
சிருஷ்டிப்பு ஆலயமதை
அழிக்கையில் நாகவிகாரையும் கூட
தூர்ந்து போயிற்று

துயரங்களினூடு எழுகின்ற
புதிய வரலாற்றினில்
பண்பாட்டின் உச்சப் படுகொலையை
நினைவு கூர்வோமாக!



# சிங்களத் தோழனுக்கொரு மடல்

யாழ்ப்பாணம்
02-6-81

அன்பிற்கினிய நந்தசேனா!

நேற்றைய மடல் கிடைத்துக்கொண்டது
அசுரமாய்ப் படிக்கின்றாய் போல்
அவசரத்தில் வரைந்துள்ளாய்
பள்ளிகளின் 'மகாபொல' திட்டங்களும்
ஆயிரமாயிரம் நூலகம் திறப்பதாய்
மந்திரியார் மைக்கினிலே அலறினாராம்
நீயுங்கூட எழுதியுள்ளாய்
பத்திரிகைகளும் பறைசாற்றுகின்றன
முன்னைய இரவில் நம்மூர் நிகழ்வுகளை
‘‘தினவச’’ வும் டெய்லி நியுசு’ கூட
வெளியிடவில்லையா!
வானொலியாவது
அலறியிருக்குமே!
இல்லையேல் இந்நற்செய்தியை
மறைத்தனவோ

நந்தசேன
உந்தன் பள்ளியில் மாத்திரமல்ல
நம் பள்ளிகளிலும் கூட
'மகாபொல' பலவும் உண்டு
ஆயினும் வேற்றுமையாய்
பரிசுகளாய் அறிவு உங்களுக்குத்
தரப்படும்
ஆனல் இங்கோ
இருக்கும் அறிவுகளைப் பறித்துவிடுவர்
இன்னமும் புரியவில்லையா!
நேற்று முன்தினமே - யாழ்
நூல்நிலையம் எரிக்கப்பட்டது
ஓர் லட்சம் அரிய நூல்கள்
அக்கினியுடன் சங்கமம்
உங்கள் 'பாளி' மொழியின்
கையெழுத்துச் சுவடிகளைக் கூட
விட்டு வைக்கவில்லை
யார் செய்தனரோ?
நேரே மந்திரிகளைப் பார்த்துக்கொள்
சுயரூபம் தெரியும்

அடுத்த மடலை - நீ
விரைவாய் அனுப்புவாய்
அனுதாபத்துடன் - அவ்வண்ணம்
மடல் அனுப்பாதே
எம்மிடம் மலையளவு அனுதாபம் உண்டு
இன்னும் சில நாட்களில்
உந்தன் கடித உறவுகள் கூட
முறிந்து விடும்
இனவாதம் முற்றுகின்றதல்லவா?

தோழமைகளுடன்
பூரணன்



# தாய்க்கோர் மடல்

பேர்லின்
*3-6-81*

அன்புத் தாய்க்கு
நேசங்களைத் தூரமைல்களால்
மறைத்தாலும்
தாய்மை அன்பை மறப்பேனா
எந்தன் தாய்த்திருநாட்டின் மீதும்
நிறைந்த நெஞ்சங் கொண்டுள்ளேன்
துயரங்களைச்
சுமந்து கொள்வது உனக்கு மட்டுமா?
இல்லையேல் - எம்
தாய்த்திருநாட்டுக்கும் கூடவே
நேற்றய வரை முன்வீட்டுச் சுப்பனும்
பின்வீட்டு மாரியும்
இறப்பதில் வெற்றியடைந்தனர் - என
எழுதிக் கொண்டாய்...

நம்மோடு தேர் வீதியில்
சுற்றித் திரித்த
பாலாவும் சுந்தரும் இப்போ எங்கே?
கண்களை மிரள வைக்காதே!
நம் நாட்டினில்
உயரவே கொடி
ஓர் நாள் பறக்கும்
முன்னைய இரவினிற் கூட
பெரும் புகையாம்
நகரமதில்...

காடையர் கொழுத்தினராம்
நாம் சுற்றியுலாவிய நூலகத்தை
ஏன் தாயே?
உனக்கும் தெரியாதே?
இல்லையேல் மறுமடலில்
மறுத்துரைப்பாயோ!
எல்லாம் புரியும் - இன்னமும் யான்
உன் முலைப்பாலை சூப்புபவனல்ல...
எரிந்து கொண்டதாம் நூலகம்
அழிந்து கொண்டதாம் அறிவாலயம்
யாரெரித்தனர்? ஏன் எரித்தனர்?
முசேலினி பரவாயில்லை
முன்னைய யுத்தங்களிலும்
பண்பாட்டைக் கெடுக்கவில்லை
தாயே!
இன்னமும் ஏன் துயர்கின்றீர்
முன்னைய இரவின் துயரத்திலிருந்து
இன்னமும் மீளவில்லையா?
எரிந்ததை எண்ணி ஏங்காதே!
நானும் நீயுமாய்
நூலகமதில் எத்தனையை
அறிந்து கொண்டோம்
அறிவகத்தை அழிப்பதில்
யார் நாட்டம் கொண்டாரோ?
என்ன பயன் கண்டனரோ?
போதிமரத்துச் சிலைக்கும்
பௌர்ணமிநாள் 'பிரித்' ஓதலுக்கும்
என்ன பயனுண்டு!
செய்வதோ படுகொலை
அதனை மறைக்கவோ பல சட்டம்
வியாபித்துக் கொள்ளும்
அரசாட்சி இன்னும் எத்தனை காலத்துக்கு
தலை தூக்கும்?
பலமைமல் அப்பாலிருந்தாலும்

என் துயர்வு உன்னைவிடச் சிறியது
ஆயினும்,
தாய்த்திருநாட்டின் இறப்பினில்
ஏங்கிக் கொண்டுள்ளபடியே .....

புதிய காற்று வீசுகையின்
முன்பாக நானும் மீள
வருவேன்
எதிரியின் வாழ்வின் இறுதிக்கு
கொள்ளியும் கையுமாய்
மீள வருவேன்
தாயே
பக்கத்து வீட்டுப் பையன்கள்
இன்னமும் துள்ளிக் குதிக்கின்றனரா?
இல்லையேல்
மறைந்து கொண்டு விட்டனரா?
எனது சுயநலம்
அவர்களையும் தொற்று
தாய் நாட்டிலேயே வாழவைத்திடு
எனது இறப்பினிலும் மேலாக
புதிய வானம் வெளித்துக்
கொள்வதாக நினைத்துக் கொள்
நான் மீள வருவேன்
என் தாய்நாட்டின்
பண்பாட்டுப் படுகொலையின்
சூத்திரதாரிகளை ஒழித்தழிக்க
மீள வருவேன்
நாளைய மடலில்
எழுதிக் கொள் - துயரங்களின்
சுமைகளை என்னுடனும்
பகிர்ந்து கொள்வாயாக!

அன்பு மகன்
வளவன்



# வாழ்வின் அளவுகோல்

நேற்றைய காலை மலர்ந்து
முடிந்தது...
இன்றும் மலரும் - பின்
முடிந்து கொள்ளும்.

நம்மூர் பாணுக்காய் வரிசை
நிரலைப் போலவே.
ஏக்கங்களுடன் மலர்தலை
எண்ணும் மாந்தர்கள்
நாளைய விடியலையும் எண்ணிக் கொள்வர்

காலை விடியும்
கதிரவனும் சுடும்

இன்றிருப்போன் நாளையில்லை
இயங்கியல்க் கூற்று
நம்மவர் வாழ்வின்
கணத்துக்கு கணமாய் ஒப்பு

வானம் அழுது கொள்ளும்
நம்மூர் குளங்கள் நிரம்பாதபடி
கண்களும் அழே

பொய்மையின் நிழலிற் பூத்த
மைந்தர்கள்
எம்
வசந்தங்களின் நனவுகளையும்
அழித்துக் கொள்வர்

இஃதால்
நாளைய விடியலை - எண்ணுதலே
ஏக்கம் நிறைந்த
நெஞ்சினையுடையதாகவே!

இன்றைய விடியலைப் பார்த்து
பூத்துப்போன கண்களுக்கு
நன்றி நயந்திடுவோம்

நமது வாழ்வின்
அளவு கோளும்
இதுவே.



# மாறுதல் செய்வோம்

காற்று மலராகப்பூத்துக்
கொள்ளும்
காயச் சீழ் தேனாகவும்
ஊற்றெடுக்கும்
நம்மை - நமதையெல்லாம
மாற்றிக் கொள்கின்றோம்

நம்மை ஆட்டிப் படைக்கும்
சொர்ப்பனத்தின்
'எல்லாம் வல்ல' இறைவனை
தான் மாத்திரம்
மாற்றிக் கொள்ள முடியவில்லை

மாறுதலாக
மாற்றிடுவோம்
மாற்றியமைத்திடுவோம்
எல்லாம் வல்ல இறைவனையும் கூட
அவரவர் மனங்களினுள்
ஏற்பவாய்
மாறுதல் செய்வோம்.

சார்ள்ஸ் கவிதைகள்



## கரையைக் காணாமல்

நேற்றுக்கூட காணாத
மழை!
இன்றோ ஐம்பது கிலோமைலில்
தூர்ந்து போகும் அணைகள்
துயரமாகும் மானுட நிலைகள்
அகழ்ந்த வயிற்றில்
மகிழும் புண்களாய்...

காகங் குருவிக்கெல்லாம்
புரியும் – 'சதை' யின் மகிமை
ஊரும் உலகும்
ஒப்பாரி கொள்ளும்

நேற்றய வயல் வெளியில்
இன்றுமோ நண்பனும் நானுமாய்
மிதக்கின்றோம் – நடையினில்
இங்குமோர் பங்களாதேசின்
வக்கிரமாய்
கந்தளாயில் *
கரையைக் கரைஞ்த
தோணிகளும்
பலவே
எம் நெஞ்சைப் போல்

கந்தளாய் * 1986 ஏப்ரலில்
திருகோணமலை கந்தளாய் அணைகட்டு உடைந்ததனால் பலர் மாண்டுபோயினர்.



# வேலிப்பகையின்
# வெற்றியினில்

காலியும் காங்கேசன்துறையும்
பக்கத்து அயல் வேலிகளாய் ..
வேலிகளுக்கிடையில்
முரண்பாடாம் - முற்றிப்போய்விட்டது
கிலுவமும் - பூவரசும்
தண்டு நுனி ஓங்கி வளர்ந்தனவாய்
அள்ளியே ஊற்றி
வளர்ந்து உயர்ந்தனவாம்.

நாணல்ப் புல்லும் ஆலவிருட்சமும்
கதையின்றியது
இஃது

வளர்ந்த தடிகள் வேலியைப்
பலப்பித்தனவாம்
நாளும் பொழுதும் வேலியை
உரமூட்டின
ஊருக்குள்ளே -- உற்றுருக்குள்ளே
எப்பகை வரினும்
வேலிகளுக்கிடையில் தான்
சண்டையேதுமில்லை
ஆயினும் வேலிகள் நடுவே
நிகழும்
மானிடச் சச்சரவுகளும்
சண்டைகளுமாய்...
ஓங்கி வளர்ந்தது உயர்ந்தது
நிழல் கொண்டது - இலுவமும் பூவரசும்
மறைத்துக் கொண்டது
மானிடர் மானத்தை
ஆயினும் நிகழ்ந்தது

ஓர்
வரலாற்றின் கண்ணீர்க் கதை
'வேலி' க் கதையாக

இலுவமும் பூவரசும் - பூக்க
முன்னரே புறுபுறுத்தன
நானகவா; நீயாகவா? - இல்லையேல்
துண்டா வெட்டா?
வேலிப்பகை - வேசத்தில்
நம்மூர் காங்கேசன்துறையும்
களலியுமாய்
வெற்றி எவ்வகையோ?
இஃது தர்மசங்கடமோ
ஆயினும் - வேலிப்பகையின்
வெற்றியினில்
மகிழ்வு கண்டது 'மண்' அன்றோ
('மண்' ஒரு ஏகாதிபத்தியமாய்க் கருதுக)



# விடியலின் கானம்

இன்னமும் விடிவு
அயர்ந்து கொண்ட வண்ணமே.

எனக்கென்ற வானம்
வயலும் - கட்டிய
சால்வையும் - கட்டுவித்த
மனை மக்களும்
எனக்கென ஜீவிப்பதால்
நான் மரணத்துடன்
போராடுகின்றேன்.

இழந்த தோழமையும் - தோழும்
நான் பிறப்பெடுத்த தாயும்
கருவின் மூலமும்
இல்லாமையை நினைக்கையில்
தான் - இன்னமும்
போராடுகின்றேன்

போராட்டம் - என் சுகமாக
எல்லோர் நலமாகவே..


ஆயினும் அயர்ந்து கொண்டது
விடியல் மாத்திரமல்ல
என் - வாழ்வின் சௌமியமும் கூட

இதனால் - இயற் பகையாய்
என்னுடன் - எம்முடன்
ஜீவிப்பதற்காய் 'விடிவு' ஒன்றே
இறுதி இலட்சியமாய்...

நாளைய வாழ்வை
மலர்விக்க எழுவோம்
விடிவுடனாய்!

உயரக் குரல் கொடுத்தே
உந்தன் பலத்தினில் - எந்தன்
தோழமையில் - விடிவின்
அயர்வை நீக்கிடுவோம்...

விடியலின் புதிய பூபாளமாய்
அறை கூவுவோம்
அகிலம் பூராக!



## உள்ளச் சிறை

சிறைகளைக் கூட்டினால்
குற்றங்கள் குறையுமாம்
பகற்கனவு காண்பது
அரசு தான்

அன்புத் தோழியே
நீயுமா?
உன் உள்ளச் சிறையினை
பெருக்கி
என்னை ஏன் வைத்துக் கொண்ட

நாம் துரோகம் பண்ணியது
உனக்கல்ல - அரசைத்தான்
உனக்குத்தானே துரோகமா?
கனவிலும் நினையாதது....
உந்தன் கடைவிழிப் பார்வையும்
தளதளத்த கன்னங்களும்
துரோகம் புரிந்தனவோ

ஆயின் - உன்
உள்ளச் சிறையினில்
என்னை இட்டுக் கொண்டாயோ

மீண்டொரு முறை உந்தன்
சிறைகளில் கைதியாகுவேன்
ஆயுள் பூராக
அது நிரந்தரமாகும் - நம்
தேச விடியலின் பின்னே.



# பரிபூரணமாய்

காற்றோடு காற்றாகக்
கலந்த கண்மணியே!
நேற்றுவரை
தோழமையின் இறுமாப்பில்
தோய்ந்து கிடந்தோம்
துப்பாக்கிகளின் மேலாக

இன்றோ! யமனை அஞ்சோம்
யாமார்க்கும் குடியகல்வோம்
போற்றியே
போராடிய உன்
தோழமை - எமக்கு
மறுதலித்து விட்டதே!

நண்ப!
உன் வசந்த வாழ்வுக்கான
கனவுகளைக் கண்டோம்
தோற்றுப்போய் விட்டோம்
எம் தோழமையினில் அல்ல -
இறப்பினில் மாத்திரம்...

தேசத்தின் விடிவைப்
பரிபூரணமாக்க
* பரிபூரணன் படைதிரண்டான்
இறுதியில்
நம் நெஞ்சத் தோழமையில்
குடி கொண்டான்
உந்தன் கனவினை
நனவாக்க - நாம்
படை கொண்ட படியே...

நமது விடிவு - அஃதே
பரிபூரணமாகும்.

* பரிபூரணன் : கொழும்புக் குண்டுவெடிப்பில்
மரித்த ஈழப் புரட்சியாளன்



## மிளிர்வின் பின்னே

அழகின் உயர்வே
அழுதின் மிளிர்வே - போற்றிடப்
பாராட்டி - மெய்மையில்
வியந்து புகழ்ந்தும் கொள்வர்
உல்லாசகர் மனதில் - அவரவர்
நிலை மனதினிற் பதித்து கொள்ளும்
காலா காலம்
மங்காப் புகழ் கொள்ளும்
இவை - ஓவியங்களும், சிற்பங்களுமாய்

காமிராக்களில் உருவங்களாய்
உதிக்கும்
வண்ணக் கோலங்களாய்
மூட்களில் முகமாய் மிளிரும்

சித்திரமும் சிற்பங்களும்
சிதையாத வாழ்வைக் காட்டும்
மாமல்லபுரமும், சிகிரியாவும்
அஜந்தாவும் - நம்மூர்
மாற்குவினதும் * கூட
வாழ்வின் வரலாற்றைக் கூறும்

ஆயினும் அந்த
வரலாறு கூறும் வாழ்வை
மெய்யாக்கிய
தூரிகை பிடித்தோனையும் - உளியை
உரமாக்கியோனையும்
யார் நெஞ்சங் கொள்வர்?

வாழ்வின் வசந்தங்களாகட்டும்
சித்திரச் சிற்பங்களின் பின்னே
உளியின் உரசலும்
தூரிகையின் துவட்டொலியும்
என்றும் கேட்ட வண்ணமாய்...

மாற்கு * ஈழத்தின் ஓவிய வரலாற்றில்
முக்கியமான சித்திரக் கலைஞன்



# முட்டாள் அறிவாயினும் மெய்யறிவாகுமா?

கற்பனையின் காகிதத்துக்
கிறல்களாய் மலர்ந்து - பின்
கம்பியூட்டராக மலர்ந்ததோ
இல்லை

கம்பியூட்டர்கள் தான் காகிதத்தைப்
படைத்தனவோ
எதுவாயினும்
உலகை மாய்த்திட
ஊனை - உறவைப் பறித்திட
'ஏகாதி' களின் மறைக்கரங்கள் தானிவை
யார் அறிவார்?
பிச்சைக்காரர் சங்கத்திலும் - ஆட்பதிவு
கம்பியூட்டர்கள் தானும்

மலங்கழிக்கவும், இனம் பெருகவும்
இதுதானு — இஃதால்
நாம் புதிய யுகத்தை நோக்கியென
அரசும் பறைசாற்றும்

ஏக்கம் நிறைந்த வாழ்வில்
வசந்தம் - இனியும்
கம்பியூட்டரில் மலருமா?
இல்லையெனில் கம்யூட்டரை
கம்பியென்ன வைத்திடுக
மானுடத்தை ஏமாற்றுமல்!



# விடியலுக்காய் காத்திரு!


யார் அறிவர்?
நமது கனவின் வசந்தங்களை
காதலிக்குக் காற்சதங்கையும்
கண்மணியாய் வாழ்ந்திடவும்
ரோட்டுக் கரை
கடற் தென்றலிலும்
கைபிடித்து நடக்க
முனைந்து - எண்ணினோம்
நம் கனவுகள்
நனவாகாதோ?

எம் ஜீவியத்தின்
கைப்பிடியாய் - கருவிகளைப்
பற்றிக்கொண்டோம்
சற்றுக் காலமது
காதலை மறந்தோம்
நம் விடியலின் பின்
கருவியை யாண்ட கரங்கள்
காதலுக்கும்
கற்சிலையைப் பதிக்கும்

நமது வாழ்வின் வசந்தம்
நிதர்சனமாய்த் துலங்கும்
காலமதில்
கண்விழி கொண்டே
நம் விடியலின் பின்னர்
நிச்சயமாய்
மேருட்டுக்கரை, கடற்றென்றலிலும்
புல்லினமாய்ப் பறந்திடுவோம்.

சற்று வரை
தாமதித்துக் கொள்
என் - கண்
மணியே!

80363



## உறக்கந்தேடும் உலகிற்காய்

தேரோடும் தெருக்களிலே
வதைபாடும் வண்டிச் சத்தங்கள்
தேனே தேமாங்குப் பேயாக - இந்த
ஊரெல்லாம் 'பூட்ஸ்' சுவடுகளாய்
தேவனும் தேவியும்
பள்ளிகொள் வாசலிலே
முட்டைக்கோதும் மனிதப் பிண்டமுமாய்...
ஆயினும்
இன்னமும் எந்தன் ஊர்
வழமை போலவே

பள்ளிகளெல்லாம் பாலர்களின்
பாடப் புத்தகங்களால்
நிரம்பி வழிந்தன - மனித
எலும்புக் கூடுகளால்
முன்னே தொங்கிக் கொண்டிருக்கும்
அனாதையாய்ப் போன
பலகையொன்று - 'அகதிகள் முகாம்'

உலகோ உறங்கிவிட்டதாய்
நினைப்பில் எலும்புக் கூடுகளும்
நிரந்தர தூக்கம் கொள்ளும்

இன்னமும் தேன் பாடும்
தேர்களும் ஓடும்
தேமாங்காய் வண்டிச் சத்தங்களுமாய்
இஃதாய் எப்போது - மீண்டும்
உலகம் அமைதி கொள்ளும்
இன்னுமோர் முறை
உறக்கங் கொள்ள



# போரிடும் பேனாக்கள்

கடுஞ்சமர் புரிந்து கொண்டோம்
காற்றிடை வெளிகளில்
கலக்கமுறும் சதைத்துண்டங்கள்
பிணக் கோலங்களிலும்
குருதி வெள்ளமாய் - நவீனம்
புரிந்தும் சித்திரம் கீறின

நாளைய பொழுதினில்
நம் வாழ்வு மலரும் என
வினவியதாய் - புரிந்தே
எழுந்து போரிட்டோம்
இன்னமுமாய் கடுஞ்சமர்
சமராகவே ...

பெறலே * யும் டிகரை * யும்
மாத்திரமன்றி
பேனுக்களோடும்
கருவியையாண்டோம்
'மா ஓ' வின் காகிதப் புலிகளல்ல
நாம்
காற்ருேடு காற்ருகக்
கலந்து கொண்ட
அன்புத் தோழமைகளின்
நெஞ்சிற்கினிய நினைவுகளுடனுய் போரிட்டுக்
கொள்கின்ருேம்
எதிரியுடன் - துப்பாக்கியுடன்
பேனுக்களுமாய் ...
போரின் வெற்றியாய்
மை முடிந்த பேனுக்கள்
நம் வாழ்வுக்கு
அர்த்தங் கூறும்



# யுக்தியாய் யுத்த நிறுத்தம்

மாலைக் காற்று மலர்ச்சியில்
இரவின் சுமைகள் உதிக்கும்
பின் நட்சத்திர அணிவகுப்புமாய்
படைத்தலைவன் 'மதி' க்கு
சல்யூட் பண்ணும்

நாளைய காலை விடியும்
பின் அணிவகுப்பு வெறியில்
'மதி' யும் மங்காது கனம் பண்ணும்

நிறைவாணன் அக்கினியாரோ
போருக்கு தயாராய் - கதிர்க்காலாட்படை
- யை குவித்துக் கொள்ளும்

பின்னர் – எல்லாம் கற்பனையாக
ஹிட்லரின் ராஜ்ஜியத்தில்
ஜனநாயகம் மலர்ந்ததாய்
வானம் பூராக மழை
பொழியும்
சண்டை நடந்தது
இடியும் மின்னலுமாய்
சந்திர - சூரிய போர்
யுத்த நிறுத்தங் கொண்டன

வழமையான அணிவகுப்பில்
மீண்டும் அக்கினியும் - மதியும்
தயாராகும்
இடையே தான்
ஒப்பந்தங்கள் - வெற்றுப பந்தாவாகி
யுத்தநிறுத்தங்' கொண்டனவாம்



## சோகசோசலிசம்

அகன்ற வெறியில்
நிறைந்த வயிறு
'கந்தப்பண்ணை' கனதியாய்
போடுவார் .
சங்கானையும் சம்மாந்துறையும்
இணைந்தது போல் ..
இன்று நேற்றல்ல எப்போதும்
போலவே!

துக்கத்தின் வெறி இன்று
துடையலாம்
ஏன் அண்ணை சாதுவாய்
என்றால்?
சனியன் பிடிச்சவங்கள்
சமத்துவ சோசலிசம்
என்று கூறி
மூன்றுக்குப் பதிலாய்
காலைத்தான் தந்தாங்கள்

கண்டறியாத
சோசலிசம் கழுத்தை அறுக்குது
கந்தப்பண்ணை நிறைவெறியில்



# பௌர்ணமி

சூரியன் கூட இரவில்
மலர்ந்தான்
ஆயினும் காகங்கள் கரையவில்லை
பொழுதும் விடியவில்லை
அஸ்தமித்த சூரியன்
மீண்டு இரா மலர்ந்ததால்
சந்திரன் பகைத்தே விட்டான்

இரவு வெளிச்சம்
மேனியைச் சுட்டது
படுக்கையைக் குழப்பியது
நாய்கள் கூட ஊளையிட்டன
இன்று சூரிய - சந்திரன்
போராம்
ஒளித்து விட்டவர் - நிலா
வென்று நிற்போன் ஆதவன்




## கரங்களை உயர்த்துவோம்

குரல்கள்
செவிபடத் தொடங்கியது
கரங்கள்
வலுவுறவும் ஆரம்பித்தது
உரிமைகள்
ஒடுக்கியும் அடக்கியும்
ஆழ எழும்பின

இதனுல்
கருவிகளை
கைகளில் ஏந்தி
காரியம் படைக்க முயன்ருேம்
இறுதியோ
புரியாத புதிராகி விட்டது

காரிய நடுவிலே
பித்தலாட்டம் பேதலித்தது
உரிமைகள் பலவும்
கருவிகளால் அடக்கப்பட்டது
பின்னர் காரியம்
கை கூடுமா என்பது
கேள்விக்குறியாயிற்று
இறுதியோ? இல்லை
இது தொடருமா ..
நேசக்கரங்கள்
அன்பு செலுத்த வந்து
அன்பைப் பறித்தது
கருவிகளை இழந்து விட்டோம்
ஆனால் கைகள் உரமாய்
வலிமையுடன் இன்னமும் உள்ளது
உரிமைகள் மீண்டும் மறுக்க
மறக்க வேண்டியதாயிற்று
எங்கள் கரங்களை
ஒன்றாக இணைத்து
உயரக்குரல் கொடுப்போம்
எங்கள் மண்ணில்
எங்கள் தேசத்தில்
நாம் உரமாய் வாழ
நாம் உயர்த்துவோம் கரங்களை



# இன்னமும் எம்முடன்

முகம் தெரியும்
உறவு தெரியும்
என்னைத் தெரியாது
உனக்கு
ஆக மொத்தமாய்
நானும் நீயும்
'கனவும் நனவும்' போல்

உனது உள்ளம் முதல்
இல்லம் வரை அறிவேன்
உந்தன் கருத்தால்
கவரப்பட்டு என்னை உன்
பாதைக்கு அழைத்தோர்
உன்னால் தான் என்றும்
புரிவேன்

ஆயினும்
நீயறியாய் என்னை
எந்தன் உடலை
நீ இன்னமும் எம்முடன்
இருக்கின்றாய் என்றே
நான் என்றும்

நினைத்துக் கொள்கின்றேன்
இவர்கள், அவர்கள்
அப்படி இப்படி என்று
பிரிபட்டு பிளவுபட்டிருந்த
காலத்திலும் நீ ஒருவன்
தனியே
யாழ் வளாகத்தையே
கையாண்டு விட்டாய்
உந்தன் செயலால்
எம்மவர் நிரம்பியே விட்டனர்
கருத்துக்களால்

இன்னமும் நீ எம்முடனேயே எங்களின்
ஒவ்வொரு செயலிலும் திட்டங்களிலும்
நீ இருக்கின்றாய் - நீ
கூறுகிறாய் நாம்
கேட்கிறோம்
நடைமுறைப்படுத்துகின்றோம்
ஆக விளைவாக
நீ இன்னமும் எம்முடனேயே
இருக்கின்றாய்



# புதிய முகாரி

காந்றோடு காற்றாகப்
பேசிக்கொள்ளும்
தேனிசைக்கும் ஊர்க்கோலம்
திக்கெல்லாம் திக்கோலமாய்
நேற்றய *படுவான்கரை
வழமைக்கு மாறாகவே

மேனியை மெழுகி
ஒழுக்கை அடைத்து
ஊரை வளர்க்க
அயராது நெஞ்சங் கொண்டோர்
'தீ' யுடன் சங்கமம்
வேலிகள் சாட்சியாய்
பல கைங்கரியங்கள் நடந்தேறும்

ஊர் மனை எரிந்தபின்பு தான்
உலகம் விடியும்
பட்டாளத்துக்கு ........
சொப்பனத்தில் மூழ்கும்
அரசும் மந்திரியும்...
ஊரே 'தீ' க்கோலத்
தாண்டவங்களுடன்
நாளைய மலர்தலில்
இன்றைய இழப்பு பெரிதல்ல
ஆயினும் போரின் - நெஞ்சத்தின்
வாழ்வுச் சுவடுகளாய்
பதிக்கும்...

இன்னுமோர் முறை புதிய
மொட்டுடன்
போர்க்கால முகாரி
பாடப்படும்

*படுவான்கரை : மட்டக்களப்பில் வன்முறையால் பாதிக்கப்பட்ட பிரதேசம்



# மரணத்திலும் விடியல்

மரணத்தைக் கூட - நாம்
வென்று விட்டோம்
எக்காலச் சொப்பனத்துக்கல்ல - இந்த
வெற்றி...
எமது தோழமையின்
உணர்விற்குக் கிடைத்த
மாபெரும் வெற்றியாகும்

எமது மரணத்தில் இன்னோர்
விடியல் மலரவே
நாமும் யாசிக்கின்றோம்

எழுக !
உயர்க !
உணர்ச்சிகளை மட்டும்
நாம் மறக்கவும் இல்லை - அவை
மரணிக்கவும் இல்லை
இதுவரை

இதனால் மரணத்தை நாம்
வென்றிடுவோம்...
புதிய மலர்வினில் எமது
மரணம்
வரவுடன் காத்து நிற்கும்
விடியலுக்காய்...



# இன்னமும் இருட்டினில்


கொண்டு வரப்படுவர்
கால்கள் கைகளில் கனத்த
இரும்புகளுடன்
கண்கள் சிவந்திருக்கும்
வாய் வரண்டிருக்கும்
'இவர்' கள் - 'அவர்' களால்
கொண்டு வரப்படுவர்...

நெல்சன் மண்டேலாவை
விடுதலை செய்!
கூறிக் கொள்ளும்
வெளிநாட்டமைச்சர் - முதலைக்
கண் கொண்டவரோ
உள்நாட்டில் எத்தனை
மண்டேலாவை மறந்து விட்டார்

இவர்கள் பட்டிமாடுகள்
ஆனால் கறக்கப் பாலில்லை
இரத்தந்தானுண்டு
ஆயினும் சுமத்துவர்
பழிகளை இவர்கள்மேல்
எறிந்தாய் கைக்குண்டு
வைத்தாய் கண்ணிவெடி - இவைதனை
மாத்திரம் சொல்வதற்கில்லை
தகர்த்தாய் வாகனம்
கொன்றாய் நம்மவரை
சுமத்துவர் செய்யாத
செயல்களுக்குமாய் - ஆகையினால்
செயற்கையாய்ச் செய்கை ஊட்டப்
பண்ணுவார் குற்றங்களை

கரைகாணாத வதை கொள்ளும்
கப்பல்களில் ஏற்றியே
வதைகளைப் புரிவர்
'இவர்' களில்
இன்னமும் மலராத மலருக்கு
மண்ணெண்ணெய் ஊற்றியும்
சிலர் வளர்ப்பர் - வதைப்பர்
ஆயினும் இங்கோ
இருண்ட நாட்கள் தான்
வளர்கின்றன
புற்றை விட்டுப் புறப்பட்டால்
பகைவனைக் கோட்டையே தகர்த்திடும்

மலமும் சலமும் இவர்களுடையது
மீண்டுமாய் - ஊறும் நீருமாய்
இவர்களுக்குரியதாகும்
இன்னமும் இவர்கள் இருட்டினில்
சிறைகளின் பின்னே
சிறைக்கம்பிகள் கூட
துருப்பிடித்து விட்டனவாம்
நம்மவர் கண்ணீரால்



## வதையின் சுமை


பழைய வானொலி பாடும்
உரசும் ஓசையில் இடையிடை
தாள கீதங்களாய்
அரசுச் செய்திகள்
வழமை போலவே

முன்னைய இரவு அயர்ந்து
இன்றைய காலை விடியலில்
பெருக்கும் வெள்ளம் ரணமாக

*கொக்கட்டிச்சோலை
கோல அக்கினிக்குச் சாட்சியம்
நாளைய வசந்தங்களின்
இழப்பில் ஓர் சோலை
கற்பிழந்த நிலையில்

இன்றும் மலர்தல் அத்தியாக
இரத்தம் தான் ஆறுகவே!
யாருக்கென்ன சுமை
சோலைப்பூமி தாங்குமோ - இந்த
வதை

* கொக்கட்டிச்சோலை : 1987 ஜனவரியில் இ
ங்கு இராணுவப் படுகொலை நடந்தது



# இழப்புகளினூடு எழுச்சியொன்று

இரத்தம் தோய்ந்து போன
தமிழாராய்ச்சி மாநாடு*
தமிழர் அழிவாராய்ச்சியாக
மாற்றப்பட்டது......
இனவாதம் கருக்கொண்டது
நம்மிடை தான் ..... —
நம் மரபின் ஆராய்ச்சியினுள்
நம்மை அழிவாக்கும்
அறிவுதனில் பெருமை கொள்வதும்
இனவாதமாய்..........

போதிமரத்தையும்
பொய்மையின் நிழலிற்
பூத்தோனையும் - பாளி
மொழிதனையும் ஆராயும் போது
புத்தனின் ஆரியம் பிறந்த
திராவிடப் பாரம்பரியம்
ஆராயப்படுவது குற்றமோ
தமிழர் தன் தலைவிதியையும்
வாய்மொழிப் பேச்சினையும்
ஆராய்வதும் - அரசால்
பொறுக்க முடியவில்லையோ?

ஊசலாடும் இனவாதம்
பேயாய்ச் சரிநிகராயினும்
நாணற் புல்லாய்
நிமிர்ந்து கொள்கின்றது - நல்விடியல்
தமிழாராய்ச்சி மாநாட்டினில்
மரித்த மாந்தர்களின் நினைவுகள்
இன்னுமோர் எழுச்சி
இழப்புகளினூடாக!

* 1974ல் யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழா ராய்ச்சி மாநாட்டின் போது சிங்களப் பொலிசாரின் தாக்குதல்களுக்கு பல தமிழர் கள் கொல்லப்பட்டனர்.



# இழப்பினை இலக்கமாக்கும் இனவாதம்

முன்னைய தூண்களில்*
கருமையைப் பூசிய
இனவாதிகள் -
இன்றைய முற்றவெளியினுள்
வெள்ளையாய் மலர் போர்த்திடுவர்

இனவாாதம் சுட்டெரியும்
முழுவாதமும் நடைப்பிணத்துக்கே

எரியும் கணங்களில்
தங்கள் குற்றம் புரியாது
இழந்த பின்னர் வேதனை
கொள்வர் வேற்றுக் கட்சிக்காய்
அறியாத இருமையினுள்
அகழாத ராட்சதர்கள்
இன்று எமக்காகத் - துக்கங்
கொள்வர் - துயரமாய்

கருங் கொள்ளிக்கட்டை
கையிலேந்தி - கடை கழனி
பூராய் சாம்பலாக்கி
மீதமாய் மலைகளைச் சுட்டும்
பின்னர் எரியாத எலும்புகளைத் தூர்த்தும்
கொடுங்கோல ஆட்சி தன்னில்
ஏனிந்த இறக்கமோ?

இன்னுமோர் தேர்தல் வருகின்ற
நினைப்பினிலேயே!
இழக்கயாய் - இழப்பை
துயரத்தை வருடுகின்றனர்

* 1974இல் தமிழாராய்ச்சி மாநாட்டில்
மரித்தவர்கள்




# எதிரியின் வரவுக்காய்

கண் விழித்துக் கொண்டிருக்கலாம்
நாளைய பரீட்சையில்
நன்கு தேறிட
ஏதுமறியாப் பக்கங்களை
சப்பையாக்கிக்
கொண்டிருப்போம்
இப்போ!
யாதுமறியா - நம்
தேசத்துச் சுவர்களில்
நம் கண்கள்
தெப்பை பண்ணிக் கொண்டிருக்கிறது
எதிரியின் வரவையெண்ணி
நம் கண்கள்
நாள் முழுக்கப் பார்த்துப்
பூத்துக் கொண்டிருக்கும்.

முன்னைய பரீட்சையில்
தேறினோம் - நன்கு
பின்னைய வாழ்வில்
வசந்தங்களை நாடியே
தேசமதைக் காத்திட
பூத்துக்கொண்டிருக்கின்றன - நம்
கண்கள்

இன்னமும் எதிரியின் வரவைநோக்கி
நாளைய விடியலுக்கொரு
புதிய
பூபாளமாய்
கண்கள் காத்துக் கொண்டிருக்கும்



# உன் விடுதலை

## உன்னுடையதாக

தோழா!
எண்ணி முடித்தனையோ
சிறைக் கம்பிகளை – அத்துடன்
உந்தன்
வாழ்வுக் காலத்தையும்
யாருக்காய் மலர்ந்தாய்
யாருக்காய் வளர்ந்தாய்
யாருக்காய் கற்றாய்
யாருக்காய் போராடினாய்
இந்த சிம்மசொப்பன சிறைக்காவலா...
தோழா!
உந்தன் வாழ்வின் வசந்தம்
யாருக்குத் தெரியும்? புரியும்,
"குற்றம் செய்தோன் தண்டிக்கப்படுவான்
சான்றோர் கூற்றுயிது
சாணக்கிய அரசின் பயங்கர
ராஜதந்திரமிது பொய்யாகவே!

உந்தன் வாழ்வின்
வசந்தங்களைப் பெறத்தான்
போராடினாய்
போருக்காகவல்ல நீ
போராடியது - இதனால்
நீ போர்க் கைதியுமல்ல
வாழ்வுடன் இணைந்த
மண்ணை இழந்து - நிர்க்கதியில்
மரணிப்பதை
எவர்தான் பொறுப்பர்
போராட்டத்தில் போருக்குத்
தயாரானாய் - அதனால்
போராடினாய்
அகிலமே உனக்குச் சாட்சி
உன் இளமைத் தனிமையை விட
மிகுதி நேரமெல்லாம்
இந்த மண்ணின் விடியலுக்காகவே
செயற்பட்டாயென
இதனை சாணக்கிய தர்மிஸ்ட அரசு
குற்றமென நினைக்கிறதோ

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

உனது விடுதலை என்பது
மரணத்தில் தானென
ஊகிப்பாய்
அதனை நாம் ஊகிப்பதா
இல்லை என்பதை இல்லையாக்கிட
முனையும் நாம் உனது
விடுதலையை மாத்திரம்

80363

இல்லையென இயல்பாக்குவதா?
நாம் மரணத்துள் மீள்வோம்
உனது தூக்கின்
கயிற்றைப் பிடித்துக்கொள்
கையாலல்ல - உந்தன் சவரம் பண்ணாத
முக மயிர்களால்
உனக்கென்ற விடுதலையை
நீயே ஏற்படுத்து அப்போதே நாம்
மிரட்சியான மரணத்தில்
புரட்சியாய் எழுவோம்
உன் விடுதலை உனது
சுயமாகட்டும்.



# தாய்க்கோர் கொலை

தாயே!
எமக்கென்ற தாய்நாடு
இல்லாமை என்ற அச்சத்தை
விரைவில் நீக்கிடுவோம்
என்ன?
முழிக்கின்றாய் - நானும் நீயும்
இந்த வையகத்தில் தானே
பிறப்பெடுத்தோம்
உன் தாய் உன்னைப்
பெற்றெடுத்தாள் - நீ என்னை
பெற்றுக்கொண்டாய்
இதற்காக நாம் - நம்
தாய்த்திருநாட்டை
இழக்க வேண்டுமாம்
இதனையோர் குற்றமெனின்
இங்கு-எங்குமே
பஞ்சம் இருக்காது...
பிறப்பது குற்றமெனில்
இருப்போர் இறக்கும் வரை - பசியின்றி
லாவகமாக வாழ்ந்திடலாமே...

எந்தன் தாயே:
கருவைதான் - சிசுவாகமுன்
அழிக்கலாம் - அங்கமாய்
மலர்ந்தபின்னும், மனிதனாகியதும்
அழிக்கலாம்
இங்கு அழிப்பதற்கு தான்
பலவும் உண்டு - ஆயினும்
ஒரு 'ரவை' போதும்

நீ தாலாட்டுவாய்
பாலூட்டுவாய்
ஊணூட்டுவாய் ..
உறங்கப் பண்ணுவாய் . . .

அத்துடன் இன்னுமோர்
கடமையுண்டு
என்னை
இறக்கவும் பண்ணிடு!
அஞ்சாதே என் அன்னையே
எனக்கென்ற
தாய்த்திருநாடு இல்லையெனில்
நான் போராடித்தான் இறப்பேன்
போரினிலே மடிவேனு
என்பது நிகழ்தகவு
இதனுல் தான் தாயே
வேண்டுகின்றேன் என்னை
போரிட வைத்திடு
இது தாயின் கொலை தன்னலமின்றியே
தாய்க்கோர்
கொலையாக!

PUBLIC LIBRAR
JAFFNA.

# சிந்தனையின் பிறப்பில்

பல்லைத் துலக்கிக் கொள்வாய்
நன்னீரில் மேனி கவிழ
சிந்தனைகள் ஆறுகும்
அடுப்பங் கரையினில்
தாய்மேல் புகையாய்
போய் வருகிறேன்
கூற்றாய்க் கூறாமல்
கண்ணின் சாடைகள்
தாய்க்குப் புரியும்
வீதிக்கரைப் பிள்ளையாரும்
வேப்பமர வேலவனும்
உறங்கிய வேளையில்
உன்னைத் தேடிப் பல
பூட்ஸ்கள்
தேடிக் கொள்ளும்
கழராத 'செயினல்' உன்
சைக்கிள் பல மைல்
கடந்திருக்கும் -- ஆயினும்
இடையே தான் காவல்
கழுகுக் குறி தவறாது
'பெறல்கள்.'
உன் நெஞ்சைப்
பதம் பார்க்கும் - அப்போதும்
சிந்தனைகள் தான்
இன்னும் பல 'சோமாஸ்' க்கள்
உருவாகுவர்
உந்தன் - சிந்தனைகளிலும்

*பெறல் - துப்பாக்கிமுனை
*சோமேஸ் - மரித்த பேராளி

# வெற்றியின் காணிக்கை

வானம் வெளித்துக் கொள்ளும்
'செல்'லின் ஒளியினூடாக
சுமையைத் தாங்கும் பூமி
ரண வெள்ளத்தினூடு
சிவப்புக் கம்பளம் விரிக்கும்
முன்னைய தாகம் திர்க்க
பின்னைய இரவில் காலன் வருவான்
காரிருள் வேளையில்
கரணவாயிலும், தம்பசிட்டியிலும்
வான்புகை மனிதர்களை கீழ்த்தள்ளும்
அட்டையாக அணிவகுப்பாம்
பட்டாளங்கள் நகர்வினால்
காலை அறிவிப்பு 'யாழ் வானொலி'
அலறும்
ஒப்பரேசன் -ஏதோ வெற்றியாம்
யார் கண்டனர்!
இறந்த மனித உடலில்
எண்ணிக்கை - இம்முறை அதிகரிப்பால்
வெற்றியாம்
காரிருள் வேளையில் இன்னுமோர்
அணிவகுப்புத் தொடரும்
வெற்றி வெற்றியானதல்ல
காணிக்கையாகவே

* ஒப்பரேசன் லிபரேசன் 1987 மே - 25 தொடக்கம் வடமராட்சியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினால் நடைமுறைப் படுத்தப்பட்ட பாரிய படுகொலை நிகழ்வு



# ஈழமாதாவுக்காய்

அழுதுகொண்டிருக்கும் வானம்
பூமி அன்னையவள்
வற்றாப் பெருக்கத்தினால்
நம் அன்னையைப்போல் துயரங்களுடனாய்
ஈழமாதாவும் ..

வற்றாத பெருநதி
ஆயினும் ரணத்தின் ஆதர்சனம்
ஊற்றுக்களை
அடைத்து விட்டதோ?
கல்லும் கும்பியுமான மணற்றிடல்கள்
கட்டாந்தரையாகுமோ?
மாதா!
எமது குருதியினால் - உன்
அழுகை நிற்குமென யாகம் புரிந்தோம்
ஆயுதங்களினால்

இன்னமும் உன் அயர்தலும்
துயர்தலும் தொடருமாயின்
நாமும் கீழ்வைப்போம் - அநாகரிக
ஆயுதங்களை



## ஊரறிய ......

நேற்றய பொழுதில்
தோழன் மரணித்தான்
சாமக்கோழி அவாதியாய்க் கூவும்
காகம் குருவி கத்தும்
காலை விடியலில்
மரணத்தை அஞ்சும் தாய் - மகனின்
வரவைக் காணாது அலறுவாள்!
ஊரறிய ஒப்பாரி வைப்பாள்
தேசத்தை மீட்கப் புறப்பட்டவன்
தகனம் பண்ணவேணுமாயின்
தாயகத்தை தாயாலேயே
தந்திரமாகப் பறித்துக் கொள்வர்!
உன் புத்தா திரஸ்தாவாதி என்று
ஊரறிய அலறும் - அரசவானொலி
இன்னுமோர் பயங்கரவாதியென
அலறும் ......

80363

* திரஸ்தாவாதி பயங்கரவாதி
* புத்தா மகன்

" 'சார்ள்ஸ்' ஒரு இளைஞர். அடக்கமும் உணர்திறனும் கவிதையில் ஆர்வமும் உள்ள இளைஞர். 80களின் பின் அரைவாசியில் கவிதைத் துறைக்குள் நுழைந்தவர். சார்ள்ஸ் கவிதைத் துறைக்குப் புதியவர் எனினும் சமூகநல நாட்டமும் அரசியல் உணர்வும் மிகுந்தவர் என்பதை அவரது கவிதைகள் நமக்குக் காட்டுகின்றன. கவித்துவ கற்பனையும் மொழியாட்சியும் இக் கவிஞரிடம் வளர் நிலையில் உள்ளன. இவரது அரசியல் உணர்வுக்குச் சமாந்தரமாக இவையும் முதிர்நிலை அடையும் போது சார்ள்ஸ் நம் மத்தியில் முக்கியமான கவிஞராக மலர்ச்சியடைவார் என்பதில் நமக்கு ஐயம் இல்லை."

— எம். ஏ. நுஃமான்
"இன்னமும் இருட்டினில்" முன்னுரையில்

"யாழ்ப்பாண பொதுசன நூல்நிலையம் அழிக்கப்பட்ட கொடிய செயல் உணர்வுக் கூர்மையுள்ள இளம் உள்ளங்களை எவ்வளவு கடுமையாகத் தாக்கியுள்ளது என்பதைக் காட்டும் ஓர் ஆவணமாக "சார்ள்ஸ்" எழுதியுள்ள "அணையாத அறிவாலயம்" எனும் கவிதைத் தொகுப்பு இப்போது வெளியாகிறது.
இத் தொகுப்பின் அடிநாதமாக ஒலிப்பது ஓர் எழுச்சிக் கீதம் நாம் பெற்றுக்கொண்ட விழிப்பினை நீடித்து வைத்திட உதவட்டும்."

இ. முருகையன்
'அணையாத அறிவாலயம்' முன்னுரையில்

"மரணங்கள் அன்றாட வாழ்வில் எதுவித முக்கியத்துவமும் பெறுதநிலை, நம்பிக்கையின்மை, விரக்தி என்பன இலக்கியகாரர்களைப் பெருமளவில் கவிஞர்களையே கூடியளவிற்கு பாதித்தது. அதன் பெறுபேறாக எண்ணிறந்த கவிதைகள் படைக்கப்பட்டுள்ளன, பலவித புதிய அனுபவங்களின் பாதிப்பினால் கவித்துறை ஈழத்தில் வளப்படுத்தப்படுகிறது, சமீபகாலமாக பெரும் தொகையினதான கவிதைகளைப் படைத்ததன் மூலம் குறிப்பிடத்தக்க கவனத்தைத் தன்பால் ஈர்ப்பவராக இளைஞர் "சார்ள்ஸ்" காணப்படுகின்றார்."

— கலாநிதி சோ. கிருஷ்ணராஜா
"விடியலின் கானம்" முன்னுரையில்

894.81
C5